-----------------------------------------------------------------------------------------------------------------------

## 1.1 அபிப்பிராயம்

----------------------

வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனி இன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனி *2018 திசெம்பர்* 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2013 மற்றும் 2018 ஆண்டுகளில் இரத்துச் செய்யப்பட்ட நகர்வுக்காக எல்பிஜீ காஸ் இறக்குமதிக்காக துறைமுகம் மற்றும் விமான நிலையம் அபிவிருத்தி தீர்வை முறையே 15.5 மில்லியன் மற்றும் ரூபா 15.1 மில்லியன் தொகையை கம்பனி செலுத்தியது. எவ்வாறாயினும், கம்பனி மீள அறவிடுவதற்கு சாதகமான நடவடிக்கை எடுத்திருக்கப்பட்டிருக்கவில்லை. | கூறப்பட்ட நிலுவையை வசூலிப்பதற்கு கம்பனி இந்த சிக்கலை இலங்கை சுங்கத்திற்கு வழங்கியுள்ளது. | நிலுவைத் தொகையை மீளப் பெறுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் |
| (ii) 31 திசெம்பர் 2018 திகதியிலுள்ளவாறு, மொத்த கொள்கலன் வைப்பு வருமதிகளில் ரூபா 4.9 மில்லியன் காணப்பட்டது. அதில் 4.55 மில்லியன் 2006 தொடக்கம் 2014 காலப்பகுதியுடன் தொடர்புடையது. | கம்பனி 2018 ஆண்டில் தொகையினுயை ஒரு பகுதியை மீட்டெடுக்க முடிந்தது மற்றும் மீட்பு பொறிமுறை இன்னும் நடந்துகொண்டிருக்கின்றது. | நிலுவைத் தொகையை மீட்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் |

எவ்வாறாயினும், கம்பனியானது அந்தத் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு சாதகமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ) 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை- நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் | | | |
| (i) 4.2.2 வழிகாட்டல் | ஒவ்வொரு மாதாந்த சபைக் கூட்டத்திலும் மாதாந்ந நிதி மற்றும் பௌதீக செயல்திறன் கூற்று, செயற்பாட்டுக்கூற்று, காசுபாய்ச்சற்கூற்று, திரவத்தன்மை நிலை மற்றும் கடன் பெறுகைகள் மற்றும் பதவி நிலைகள், புதிய ஆட்ச்சேர்ப்பு உள்ளடங்களான மனிதவளக்கூற்று ஆகியவை அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2003 யூன் 02 இன் பீஈடி/12 பிரிவு 4.2.2 குறிப்பிட்டதன்படி மாதாந்த நிதிக்கூற்றுக்கள், சபைக்கு மாதாந்த அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றது. | சபைக்கு செய்யப்படும் அனைத்து சமர்பிப்புக்கள்/ விளக்ககாட்சிகள் உறுதிப்படுத்துவதற்கான எல்லாச்சான்றுகளையும் வைத்திருக்கவேண்டியிருக்கின்றது. |
| (ii) 4.3 வழிகாட்டல் | சபைக்கூட்டம் முடிவடைந்து பத்து நாட்க்களுக்குள் சபைக்கூட்டக் குறிப்பானது வரிசை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | 2019ஆண்டு முதலிருந்து சபைக் கூட்டங்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள் வரிசை அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிகப்பட்டிருந்தன. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்ப்பாடுகளை பின்பற்ற வேண்டும் |
| (iii) 5.1.1 வழிகாட்டல் | கம்பனி மூன்று வருடத்திற்குரிய கூட்டிணைந்த திட்டம் (Corporate plan) தயாரிக்க வேண்டும் மற்றும் அத்திட்டமானது ஆண்டுதோறும் மேம்படுத்தப்பட | 2019 ஆம் ஆண்டுக்கான குறித்த அறிக்கைகள் 2019 நவம்பர் 14 ஆந் திகதி சபையால் அங்கீகரிக்கப்பட்டு வரிசை அமைச்சு, பொது முயற்சி | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்ப்பாடுகளை பின்பற்ற வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டும். மேம்படுத்தப்பட்ட ஆண்டுக்கான பாதீட்டுடன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதி நிதியாண்டு தொடங்குவதற்கு பதினைந்து நாட்களுக்கு முன்பு வரிசை அமைச்சு, பொது முயற்சி திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அனுப்புதல வேண்டும். எவ்வாறாயினும் கம்பனி இத்தேவைப்பாட்டுடன் இணங்கயிருக்கவில்லை. | திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கு 2019 ஜனவரி 17 இல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | |
| (iv) 5.2.1 வழிகாட்டல் | பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட மூலதன செலவினங்கள் செயற்பாட்டு திட்டத்துடன் உள்ளடக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2018 ம் ஆண்டுக்கான செயற்பாட்டுத்திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில் லை. | 2018 பாதீட்டில் செயற்பாட்டுத் திட்டம் உள்ளடக்கப்படவில்லை என்றாலும் 2019 ம் ஆண்டிற்கான கொள்ளல்திட்டத்திற்கா ன செயற்பாட்டுத்திட்டதை நாங்கள் தயாரித்து வரிசை அமைச்சு, பொது முயற்சி திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அனுப்பிவைத்தோம். | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |
| (v) 5.2.2(b) வழிகாட்டல் | பத்து மில்லியனுக்கு மேற்பட்ட மூலதன செலவினங்களுக்கு அமைச்சு மற்றும் பொது முயற்சி திணைக்களம், பொது திறைசேரியில் அனுமதி பெறப்பட்டிருக்கவேண்டும். எவ்வாறாயினும், கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருந்திருக்கவில் லை. | இலங்கையினுடைய அரசியல் அமைப்பின் 19 வது திருத்ததின் கீழ் மூலதன செலவு உள்ளடங்கலான கொள்ளல் நடைமுறைகளை நாங்கள் பின்பற்றுகின்றோம். எனவே வகையின் கீழ் மூலதன செலவினங்களுக்கான அங்கீகாரங்கள் அந்நந்த பொருத்தமான குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிரு ந்தன. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (vi) 9.2 வழிகாட்டல் | பொதுமுயற்சி திணைக்களம், பொதுதிறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலையுடன் பதிவுசெய்யப்பட்ட அமைப்பு வரைபடத்தை கம்பனி கொண்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் வெற்றிடங்கள் அங்கீகரித்தலை அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள மனிதவளத்திற்கான எந்தவொரு நடைமுறையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் கம்பனியினுடைய அமைப்பு அகவிதியின் பிரகாரம், அனைத்து புதிய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களுக்கான செலவுகள் / பாதீட்டு ஒதுக்கீடு சபையின் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் கம்பனியினுடைய ஆண்டுப்பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |
| (vii) 9.3 வழிகாட்டல் | சபை மற்றும் அமைச்சு, பொது முயற்சி திணைக்களங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் பதவியுயர்வு திட்டங்களை கம்பனி கொண்டிருக்கவில்லை. | செயற்பாட்டு முகாமைதிட்டத்தின் அடிப்படையில் அனைத்து உத்தியோகத்தர்கள் பதவியுயர்வுகள் வரிசை மேற்பார்வையாளர்கள் / தொழிற்பாட்டு தலைவர்களால் பரிந்துரைக்கப்பட்டு முகாமைத்துவ பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டன. அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள மனிதவளத்திற்கான எந்தவொரு நடைமுறையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் கம்பனியினுடைய அமைப்பு அகவிதியின் பிரகாரம், அனைத்து புதிய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களுக்கான செலவுகள் / பாதீட்டு ஒதுக்கீடு சபையின் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | கம்பனியினுடைய ஆண்டுப்பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| (viii) 9.7 வழிகாட்டல் | சம்பளங்களும் மற்றும் படிகளும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும் மற்றும் பொது திறைசேரி செயலாளரினுடைய அங்கீகாரமின்றி திருத்தங்கள் அனுமதிக்கப்படமாட்டாது. எவ்வாறாயினும், கம்பனி இத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருந்திருக்கவில்லை. | அனைத்து உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படி திட்டங்கள் தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்டது. அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள மனிதவளத்திற்கான எந்தவொரு நடைமுறையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் கம்பனியினுடைய அமைப்பு அகவிதியின் பிரகாரம், அனைத்து புதிய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களுக்கான செலவுகள் / பாதீட்டு ஒதுக்கீடு சபையின் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் கம்பனியினுடைய ஆண்டுப்பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |
| (ஆ) 01 செப்தெம்பர் 2011 திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் பீஈடி 58(2) | நிறுவனங்களின் வகைப்படுத்தல்கள் சுற்றறிக்கைக்கு அமைவாக லிற்றோகாஸ் லங்கா லிமிடெட் ‘‘எப் (F)’’ வகையின் கீழ் காணப்படுகின்றது. இந்த உப பகுதியின் கீழ் அரச உடைமை நிறுவனங்களின் பிரதான நிறைவேற்று அதிகாரிகளினுடைய படிக் கொடுப்பனவுகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளானது ஒத்த நிறுவனங்களால் பிரயோகிக்கப்பட்ட போட்டிச்சந்தை வீதங்கள், கல்வி மற்றும் தனிநபரின் திறமை போன்றவற்றிற்கிணங்க மதிப்பிற்குரிய நிதி | அனைத்து உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படி திட்டங்கள் தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்டது. அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள மனிதவளத்திற்கான எந்தவொரு நடைமுறையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் கம்பனியினுடைய அமைப்பு அகவிதியின் பிரகாரம், அனைத்து புதிய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களுக்கான செலவுகள் / பாதீட்டு ஒதுக்கீடு சபையின் | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் திட்டமிடல் அமைச்சரின் சம்மதத்துடன் உரிய பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும். எவ்வாறாயினும், கம்பனியின் அமைப்பு அக விதியின்படி முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் அனைத்து செலவுகள் அல்லது பாதீட்டு ஒதுக்கீடு கம்பனியினுடைய ஆண்டுப்பாதீட்டில் உள்ளடக்கபட்டிருந்தது. | முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் கம்பனியினுடைய ஆண்டுப்பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| (இ) 2018 ஆம் ஆண்டு 19 ம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டம் பகுதி 41 (I) | முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலும், கம்பனியால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு இதுவரை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்கியுள்ளோம் என்பதனையும், 02.06.2003 திகதியிடப்பட்ட பீஈடி/12 இன் பிரகாரம் வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் ரேமினல் லங்கா கம்பனிக்கான கணக்காய்வு குழு ஒன்றை ஸ்தாபிக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனையும் தயவுசெய்து நினைவில் கொள்ளவும் | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகள் மற்றும் திறைசேரியின் சுற்றறிக்கைகளை பின்பற்ற வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 391,443,422 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 260,391,456 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 131,051,966 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. கம்பனியினுடைய வருமானம் 28 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் முதலீட்டாளருடைய பங்கு இலாபம் 1694 சதவீதத்தால் அதிகரித்தமை என்பன வருமான முன்னேற்றத்தின் பிரதான காரணங்களாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

சேகரிக்கப்பட்ட தகவலின் படி, 2018 ம் ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| இலாபத்தன்மை விகிதங்கள் (சதவீதம்) | 2018 | 2017 |
|---|---|---|
| மொத்த இலாபம் (ஜீபீ) | 6.38 | 4.00 |
| தேறிய இலாபம் (என்பீ) | 1.01 | 0.86 |
| சொத்துமீதான திரும்பல்(ஆர்ஓஏ) | 1.53 | 1.05 |
| ஈடுபடுத்திய முதல் மீதான வருவாய் (ஆர்ஓசிஇ) | 2.39 | 1.96 |

**திரவத்தன்மை விகிதங்கள்** (தடவைகளின் எண்ணிக்கை)

| | | |
|---|---|---|
| நடைமுறைச்சொத்து விகிதம் | 3.51 | 3.1 |
| விரைவுச்சொத்து விகிதம் | 3.14 | 2.70 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் முறையே 2.38 சதவீதம் மற்றும் 0.15 ஆல் அதிகரித்திருந்தது மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சொத்து மீதான திரும்பல் மற்றும் ஈடுபடுத்திய முலதனம் மீதான திரும்பல் முறையே 0.48 சதவீதத்தால் மற்றும் 0.43 சதவீதத்தால் அதிகரித்து காணப்பட்டது. வருமானதினுடைய அதிகரிப்பு காரணமே முன்னேற்றத்தின் பிரதான காரணமாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறை விகிதம் மற்றும் திரவத்தன்மை விகிதம் 0.44 ஆல் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கம்பனி 38 வியாபார அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்கள், 03 வியாபார ஆய்வாளர்கள், 03 ஆலோகசர்கள், 08 அமைச்சு ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒப்பந்த அடிப்படையில் 2015 முதல் 2018 வரையிலான காலப்பகுதியில் கம்பனியால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தனிநபர்களுக்கான ரூபா. 52.42 மில்லியன் ஊதியமாக காணப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | வியாபார அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்கள் கம்பனிக்கு பெறுமதி சேர்த்துள்ளார்கள் மற்றும் கணக்காய்வு காலப்பகுதியில் கணக்காய்வாளர்களுக்கு வேலை முடிவுறல் அறிக்கை கிடைக்ககூடியதாகவிருந்தது | |
| (i) மேலேயுள்ள ஆட்சேர்ப்புக்காக 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க 9.10 இன் பிரகாரம் கம்பனி திறைசேரி செயலாளரினுடைய அங்கீகாரத்தை பெறப்பட்டிருக்கவில்லை. ஆயினும் கூட மேலேயுள்ள 10 ஆட்சேர்ப்புக்காக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலேயுள்ள அவதானிப்புகளுக்கு பதிலளிக்கும் விதமாக கம்பனியினுடைய முகாமைத்துவ பணிப்பாளர் பின்வருமாறு கூறினார்.<br>" எல்ஜிஎல்எல் இனுடைய இயக்குனர்சபை திறைசேரி | கருத்துரை இல்லை. | அதிகார சபையால் வழங்கிய வழிகாட்டல்களை கம்பனி கடைப்பிடிக்க வேண்டும். |

செயலாளரினுடைய பிரதிநிதிகள் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும், அவர்கள் எல்ஜிஎல்எல் இனுடைய நாளாந்த விடயங்களில் திறைசேரி செயலாளரின் வெளிப்படையான மற்றும் உறுதிபடுத்தக்கூடிய அதிகாரத்தை பயன்படுத்துகின்றனர்.'' மற்றும் தற்போது சேவை ஒப்பந்தங்களில் வழக்கத்திலுள்ள நடைமுறைகள் சபைக்கு சமர்ப்பிக்கபடவில்லையென்று கூறவேண்டும்.

(ii) மேலேயுள்ள பதவிகளுக்க இந்த நபர்களை தெரிவு செய்வதற்கு முறையான ஆட்ச்சேர்ப்பு மற்றும் அடிப்படை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. வியாபார அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்களாக வேலைசெய்வோரின் திறனை செவ்வைபார்ப்பதற்கு குறைந்தபட்சம் அடிப்படை தகுதிகள் மற்றும் அனுபவங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. சில நபர்கள் சம்பந்தப்பட்ட துறையில் வேலை அனுபவங்களை வழங்கியிருக்கவில்லை மற்றும் சிலர் அப்போதைய நிதி அமைச்சரின் வேண்டுகோளின் அடிப்படையிலே மட்டுமே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்

ஆரம்பத்தில் மேற்க்கூறப்பட்ட நபர்கள் கம்பனியின் ஊழியர்கள் அல்ல என்று சொல்வ வேண்டும், அவர்கள் சுயாதீனமான ஒப்பந்தகாரர்களாக இருந்தனர். அவர்கள் ஒப்பந்தத்தில் அடையாளம் காணப்பட்ட குறிப்பிட்ட வேலைக்காகவும், அந்தந்த ஒப்பந்தங்களில் குறிப்பிட்டுள்ளபடி ஒரு குறிப்பிட்ட காலத்திற்காகவும் செலுத்தப்பட்டிருந்தது.

எனவே 1.9 (b) படி உங்கள் அவதானிப்பு எழவில்லை. எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட வேலைகள் ஒரு நடைமுறை இயல்பானது, இது கூட்டத்தினரிடையே தெரிவுநிலை மற்றும் பொது இடங்களுக்குச் சென்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல், தரவுகளை சேகரித்தல் மற்றும் துணை அல்லது அதனுடன் தொடர்புபட்ட எந்தவோரு செயலையும் மேற்க்கொள்ள விருப்பம் தேவை என்று கூறவேண்டும். உண்மையில் ஒப்பந்தங்களிலுள்ள பந்தி 03 இல் இந்த நபர்கள் சுயாதீனமான ஊழியர்கள் என்பதனைக் குறிப்பிடுகின்றது, மேலும் எல்ஜிஎல்எல் கம்பனியுடன் ஒரு ஊழியர், பங்காளர், முகவர் அல்லது கூட்டுமுயற்சியாக இருக்ககூடாது.

சம்பந்தப்பட்ட அதிகார சபை அங்கீகாரங்களுடன் ஆட்சேர்ப்புக்களுக்கு பொருத்தமான நடைமுறைகள் மற்றும் அடிப்படை உபயோகிக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| (iii) சில நியமனதார்களின் வேலைகளின் நோக்கம் கம்பனியால் தெளிவாக வழங்கப்பட்டிருக்கவில்லை மற்றும் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை | நிதி அமைச்சு ஜனவரி 2015 முதல் செப்டெம்பர் 2015 வரையில் வரிசை அமைச்சாக இருந்தது, தற்போதைய வேலை இடமாகிய நிதி அமைச்சிற்கு அறிக்கை வழங்குவதற்கு ஆய்வாளரை விடுவிக்க அமைச்சின் உத்தரவு இருந்தது. வியாபார மேம்பாடு மற்றும் எல்ஜிஎல்எல் உடைய செயல்திறனைப் பகுப்பாய்வு செய்வது தொடர்பாக வரிசை அமைச்சுடன் அவர்கள் நெருக்கமாக பணியாற்றினர் என்பது எங்களுடைய நம்பிக்கை மற்றும் புரிதலும் ஆகும். | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் (2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை வழிகாட்டல் 9.4) |
| (iv) ஒரு சேவை ஒப்பந்தத்தின் மூலம் வியாபார அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்களுக்கு வேலை ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைசெய்யப்பட்டதிற்கான அறிக்கை கம்பனிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் கொடுப்பனவுகளுக்கு முன் பொருத்தமான மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் நுழைந்தவை சேவை ஒப்பந்தங்கள் அல்ல, ஆனால் அவை வழங்கப்படும் சேவைக்கான ''சுயாதீன ஒப்பந்தங்கள்'' என்பதனை தயவுசெய்து நினைவில் கொள்க. வேலை முடிவுறுத்தல் அறிக்கைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை பெற்ற பின்பு பணம் செலுத்தப்பட்டுள்ளது. | நோக்கங்கள் அடையப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்த கம்பனி போதுமான சான்றுகளை வைத்திருக்க வேண்டும். |
| (v) கம்பனி 03 ஆலோசகர்களை நியமித்திருந்தது. எவ்வாறாயினும் நியமனங்களுக்கு முன்னர் தேவைகள் குறித்த சரியான மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அவை அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்தன. | கருத்துரை இல்லை. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். |
| (vi) விரிவாக்கல் திட்டங்கள் மற்றும் புதிய கருத்திட்டங்கள் குறித்து கம்பனிக்கும் அரசாங்க தொழில் முயற்சி அபிவிருத்தி இடையே தொடர்பை ஏற்படுத்துவதற்கு 08 தனிநபர்களை அமைச்சின் ஒருங்கிணைபாளர்களாக நியமித்திருந்தது மற்றும் 04 வாகனங்கள் அவற்றை பராமரிக்க ரூபா 1.5 மில்லியனுக்கம் அதிகமான செலவில் ஒதுக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அவர்களால் ஒருங்கிணைந்த திட்டங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. | அரசாங்க தொழில் முயற்சி அபிவிருத்தி செயலாளரினால் வருகை உறுதிப்படுத்தப்பட்டதன மேல் இந்த ஒருங்கிணைபாளர்களுக்கு பணம் செலுத்தப்பட்டது. செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அமைச்சிடம் கிடைக்க வேண்டும். | தங்கள் கடமையைச் செய்யாத உத்தியோகத்தர்களுக்கெதிராக கம்பனி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் எந்தவொரு கொடுப்பனவுகளையும் மீளப்பெறவேண்டும். |

**3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 முதல் 2018 வரை தொல்பொருள் மற்றும் தொண்டு நடவடிக்கைகளுக்கள் குறித்து ஆராய்ச்சிக்கான நிதி உதவியை வழங்குவதற்கான பயண கொடுப்பனவுக்காக கம்பனி பணம் செலுத்தியிருந்நது. சிஎஸ்ஆர் (CSR) செயற்பாட்டின் ஒரே செயற்பாட்டிற்காக கம்பனி ஒரு தரப்பினருக்கு பணம் செலுத்தியிருந்தது. மேலும், சம்பந்தப்பட்ட தரப்பினரின் செயற்பாட்டு அறிக்கை வேண்டுகோளுடன் இணங்கியிருக்கவில்லை. | வேண்டுகோளின் பிரகாரம், அவர் நாடு முழுவதும் பிரயாணம் செய்யவேண்டியிருப்பதனால், அவரது கோக்குவரத்து செலவுகளை மாதாந்த அடிப்படையில் ஆதரிக்க சபை முடிவுசெய்தது. | நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்கு நிதி பயன்படுத்தப்பட்டதா என்பதனை கம்பனி உறுதிசெய்து, கொடுப்பனவுகள் செலுத்துவற்கு முன் சம்பந்தப்பட்ட அதிகார சபையிடமிருந்து அங்கீகாரம் பெற ஒரு நடைமுறையை ஸ்தாபிக்க வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| காஸ் கம்பனியின் முன்னால் நிர்வாக நிறுவுனரினால் 1986 ம் ஆண்டில் ரூபா. 13 மில்லியன் பெறுமதியில் உருகொடவத்த என அழைக்கப்பட்ட நிலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிலத்தின் உறுதி வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் கம்பனியின் பெயரின் கீழ் மாற்றி பெறப்பட்டிருக்கவில்லை மற்றும் கம்பனியினால் அந்த நிலம் கொள்வனவு செய்யயப்பட்ட திகதியிலிருந்து உபயோகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை இல்லை. | காணியின் உரிமையை கம்பனிக்கு மாற்ற கம்பனி உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரசாங்க பெறுகை வழிகாட்டியை பின்பற்றாமல், கம்பனி 2015 ம் ஆண்டில் 5,996 சிலிண்டர்களை (12 கிலோகிராம்) ஒரு தனியார் கட்சியிடமிருந்து ரூபா.18,233,819 மெறுமதியில் இன்னும் விளைவற்ற நிலையில் கொள்வனவு செய்திருந்தது. மேலும், மனு கோரல் நடைமுறை தொடர்பாக எழும் பல முறைகேடுகள் குறித்து விசாரணை முடியும்வரை அரசாங்க தொழில் முயற்சி அபிவிருத்தி சிலிண்டர்களை சந்தைக்கு வழங்கவேண்டாம் என்ற வேண்டுகோள்விடப்பட்டது அவதானிக்கப்பட்டது. | இந்த மனுகோரல் கம்பனி பெறுகை வழிகாட்டலின்படி 2016 இல் செய்யப்பட்டது மற்றும் வழங்கப்பட்ட சிலிண்டர்கள் எஸ்எல்எஸ்ஐ இனால் அங்கீகரிக்கப்படவில்லை. இதனால் இந்த மனுகோரல் முடிவுறுத்தப்பட்டது. தற்போது யாட்டிலிருக்கும் (yard) சிலிண்டர்கள் சந்தைக்கு வெளியிட பாதுகாப்பு நியமங்களுக்கு பொருந்தும் வகையில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. இந்த மனுகோரல் மீது அரசாங்க தொழில் முயற்சி அபிவிருத்தி வரிசை அமைச்சினால் மேற்கொண்ட புலனாய்வில் தாமதம் இருந்தது. | பிரச்சினையை தீர்க்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |